2026 ஜூன் மாதம் 12– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 131/2025

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW7 (LW11) – அஜித் |
| தகப்பனார் பெயர்: | மொக்கையன் |
| ஊர்: | தேவாரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | எலக்ட்ரிசியன் |
| வயது : | 29 |

12.06.2026

(2, 3 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, தேவாரம், ஜெய்நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.05.2025ம் தேதி நான் தேவாரத்தில் இருந்தபோது, இரவு சுமார் 11.30 மணியளவில் தொலைபேசியில் சுந்தரின் மகள் சுபத்ரா என்பவர் அனுமந்தன்பட்டியில் உள்ள சுந்தர் என்பவர் வீட்டிற்கு முன்பு தகராறு ஏற்பட்டு மல்லுக்கட்டினார்கள் என்று சொன்னார்கள். அதிகாலை 12.30

மணியளவில் அனுமந்தன்பட்டியில் உள்ள சுந்தர் வீட்டிற்கு வந்தோம். 12.45 மணியளவில் உத்தமபாளையம் காவல்நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். சம்பவ இடத்தில் வரைபடம் தயார் செய்து, பார்வை மகஜர் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் என்னிடமும், எனது தந்தை மொக்கையன் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 01.15 மணியளவில் கட்டை, ஹாலோபிளாக் கல், சவுக்கு மரம், ரீப்பர் கட்டை, செருப்பு, மூன்று இரத்தம்படிந்த சிமிண்ட் தரை, மூன்று இரத்தம்படியாத சிமிண்ட் ஆகியவற்றை போலீசார் எனது தந்தை மொக்கையன் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அத்தாட்சியில் எனது தந்தையும் கையொப்பம் செய்தார். அந்த அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2.15 மணியளவில் காவல்துறை துணைக்காண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள்.

3. மேலும் 2.15 மணியளவில் காவல்துறை துணைக்காண்காணிப்பாளர் தயார் செய்த பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் மூன்று இரத்தக்கறை படிந்த சிமிண்ட், மூன்று இரத்தக்கறை படியாத சிமிண்ட், ரீப்பர் கட்டை, ஹாலோபிளாக் கல், உருட்டுக்கட்டை, உடைந்த முருங்கை மரக்குச்சி, செருப்பு ஆகியவை சம்பவ இடத்திலிருந்து போலீசாரால் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களாகும். மூன்று இரத்தக்கறை படிந்த சிமிண்ட் **சா.பொ.14 முதல் சா.பொ.16** ஆகவும், மூன்று இரத்தக்கறை படியாத சிமிண்ட் **சா.பொ.17 முதல்**

**சா.பொ.19** ஆகவும், முருங்கை மரக்கம்பு **சா.பொ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

4. காவல் ஆய்வாளர் வழக்குச் சம்பந்தமாக எப்போது என்னை விசாரித்தார் என்றால் மறுநாள் விசாரித்தார். தேவாரத்திற்கும், அனுமந்தன்பட்டிக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 கி.மீ. தூரம் இருக்கும். போலீசார் விசாரணையில் சுந்தர் மகள் சுபத்ரா தொலைபேசியில் எனக்கு தகவல் சொன்னார் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் இல்லை. எனக்கு தகவல் கிடைக்கும்போது காயம்பட்ட நபர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று கேட்டேனா என்றால் கேட்டேன், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாக சொன்னார், பதற்றத்தில் எந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்று நான் கேட்கவில்லை. எத்தனை நாட்கள் பதற்றத்தில் இருந்தேன் என்றால் மறுநாள் வரை இருந்தது. நான் பதற்றத்தில் இருந்ததால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, நான் தெளிவாக இருந்தேன்.

5. அதன் பின்னிட்டு எந்த மருத்துவமனைக்கு காயம்பட்டவர்களை அழைத்துச் சென்றார்கள் என்று கேட்டு முயற்சித்தேனா என்றால் முயற்சித்தேன். அவ்வாறு முயற்சித்தப்போது காயம்பட்டவர்களை எந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்ற விபரம் தெரிந்தது என்றால் சரிதான். அவ்வாறு நான் தெரிந்து கொண்ட உத்தமபாளையம் அரசு மருத்துவமனை என்றால் இல்லை, தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகும். அவ்வாறு தேனி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிந்த கொண்டபோது, நான் தேவாரத்தில் இருந்தேன் என்றால் சரியல்ல, அனுமந்தன்பட்டியில் இருந்தேன்.

6. ஒருவர் உத்தமபாளையம் அரசு மருத்துவமனையிலும், மற்றொருவர் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள்

என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் தகவல் கிடைத்த பின்பு முதன்முதலில் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் இறந்த பின்பு தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். நான் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 5 மணி இருக்கும். சம்பவத்திற்கு முன்பு சுந்தர் வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். சுந்தர் எனது உறவினர் என்றால் சரிதான். சுந்தர் வீட்டிற்கு எந்த திசையில் எதிரி பார்த்திபன் வீடு உள்ளது என்றால் வடக்குத் திசையில் உள்ளது.

7. நான் சுந்தர் வீட்டிற்கு சென்ற பின்பு சார்பு ஆய்வாளர் வந்தாரா என்றால் நான் சென்று 10 நிமிடங்கள் பின்னிட்டு சார்பு ஆய்வாளர் அங்கு வந்தார். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது அக்கம் பக்கத்தினர் கூடியிருந்தார்கள் என்றால் இல்லை. சுந்தர் வீட்டில் ஆட்கள் இருந்தார்களா என்றால் இல்லை. சுந்தர் வீடு திறந்து இருந்ததா என்றால் திறந்து இருந்தது. எதிரிகளின் வீடு திறந்திருந்ததா என்றால் பூட்டப்பட்டு இருந்தது. சம்பவ இடத்திற்கு வந்த சார்பு ஆய்வாளர் சுந்தர் வீட்டிற்குள் சென்றாரா என்றால் இல்லை. சுந்தர் வீட்டிற்கு வடக்குப் பக்கம் இரத்தக்கறை இருந்தது என்றாலும், இரத்தப்படிவுகள் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சுந்தர் வீட்டின் முன்பு இருந்து எடுத்துக்கொண்டார்கள்.

8. சுந்தர் வீட்டிற்கு முன்பு இருப்பது வடக்குப் பக்கம் என்றால் இல்லை, கிழக்குப் பக்கம் ஆகும். சுந்தர் வீட்டிலிருந்து கீழே இறங்கியவுடன் அது எதிரி பார்த்திபன் வீட்டிற்கான பாதை என்றால் சரிதான். வடக்குத் தெருவிலிருந்து பிரியக்கூடிய மண்பாதை என்றால் சரியல்ல, சிமிண்ட் பாதையாகும். அந்த பாதை அரசால் போடப்பட்ட சிமிண்ட் பாதை என்றால் சரிதான். அந்த சிமிண்ட் பாதை சிமிண்ட், ஜல்லி ஆகியவற்றை கொண்டு போடப்பட்ட பாதை என்றால் சரிதான். அந்த பாதை 6 அடி அகலமுள்ள பாதை என்றால் 6 அடிக்கு மேல் இருக்கும்.

8 அடி இருக்குமா என்றால் தெரியவில்லை. அந்த பாதையை தவிர மற்ற காலியிடங்கள் மண்தரை என்றால் சரியல்ல, சிமிண்ட் தரை ஆகும். அந்த காலியிடம் சிமிண்ட், ஜல்லி ஆகியவற்றை கொண்டு போடப்பட்ட இடம் என்றால் சரியல்ல, சிமிண்ட் மட்டும் போட்ட இடமாகும்.

9. இரத்தம்படிந்த முதல் சிமிண்ட் எங்கிருந்து, எவ்வளவு தூரத்தில் எடுக்கப்பட்டது என்றால் சுந்தர் வீட்டிற்கு முன்னால் 10 அடி தூரத்தில் எடுக்கப்பட்டது. இரத்தம்படிந்த இரண்டாவது சிமிண்ட் எங்கிருந்து, எவ்வளவு தூரத்தில் எடுக்கப்பட்டது என்றால் சுந்தர் வீட்டிற்கு முன்னால் வடக்குப்பக்கம் 5 அடி தூரத்தில் எடுக்கப்பட்டது. இரத்தம்படிந்த மூன்றாவது சிமிண்ட் இரண்டாவதாக எடுத்த இடத்திலிருந்து வடக்குப்பக்கம் 3 அடி தூரத்தில் எடுக்கப்பட்டது. இரத்தம்படியாத சிமிண்ட் மூன்றாவதாக எடுத்த இரத்தம்படிந்த சிமிண்ட்டிலிருந்து 10 அடி தூரத்தில் எடுக்கப்பட்டது என்றால் அதன் அருகிலேயே எடுக்கப்பட்டது.

10. மூன்றாவதாக எடுக்கப்பட்ட மண்ணுக்கு அருகிலிருந்து கம்பு எடுக்கப்பட்டதா என்றால் முதலாவதாக எடுக்கப்பட்ட இடத்திலிருந்து கம்பு எடுக்கப்பட்டது. கம்பு, கல் ஆகியவை ஒரே இடத்தில் ஒன்றாக இருந்தன என்றால் சரியல்ல, தனித்தனியாக தள்ளி இருந்தன. கல்லுக்கு எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் முருங்கை கம்பு கிடந்தது என்றால் கிழக்குப் பக்கத்தில் பக்கமாக தான் இருந்தது. முருங்கை கம்புக்கு எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் ரீப்பர் கம்பு இருந்தது என்றால் பக்கமாக ஒருஅடி, 2 அடி தூரத்தில் இருந்தது. ஒரு அடி, 2 அடியில் எல்லா பொருட்களும் இருந்தன என்றால் 1 அடி, 2 அடி தூரத்தில் தனித்தனியாக இருந்தன. செருப்பும் அதே தூரத்தில் இருந்தது என்றால் சரிதான்.

11. போலீசார் பொருட்களை கைப்பற்றியபோது எவ்வளவு தூரத்தில் ஒவ்வொரு பொருட்களும் இருந்தன என்று அளவுகள் குறிக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. ஹாலோபிளாக் வைத்து சுவர் எழுப்புவார்கள் என்று எனக்கு

தெரியும் என்றால் சரிதான். ஃபேவர்பிளாக் கல் சாலை பதிப்பதற்காக பயன்படுத்தப்படும் என்றால் சரிதான். ஃபேவர்பிளாக், ஹாலோபிளாக் வெவ்வேறு என்றால் சரிதான். சா.பொ.8 ஹாலோபிளாக் சாலைக்கு பயன்படுத்தப்படும் என்றால் சரிதான். வழக்குச் சம்பந்தமாக என்னை காவல்நிலையத்திற்கு அழைத்தார்களா என்றால் இல்லை. காவல்துறை துணைக்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்து எந்தெந்த பொருட்கள் எந்தெந்த இடத்தில் இருந்தன என்று என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. காவல்துறை துணைக்காணிப்பாளர் வழக்குச் சம்பந்தமாக எத்தனை முறை விசாரித்தார் என்றால் ஒரு முறை விசாரித்தார்.

12. காவல்துறை துணைக்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது, ஆய்வாளர், சார்பு ஆய்வாளர், மற்ற போலீசார்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். காவல்துறை துணைக்காணிப்பாளர் இறந்துபோன சுந்தரின் வீட்டைச் சுற்றிலும் பார்த்தாரா என்றால் பார்த்தார். வீட்டிற்குள் இருந்த பொருட்களை பார்த்தாரா என்றால் இல்லை. எதிரிகளின் வீட்டை சுற்றி பார்த்தார் என்றால் இல்லை. அங்கிருந்த போலீசார் எதிரிகளின் வீட்டை திறக்க முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன விதத்தில் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும், பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், அவைகள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும், அங்கு வைத்து என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றாலும், நான் சுந்தரின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.06.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.12 18:45:29 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.06.2026